மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

முன்னிலை :- **திரு. A.S. அமீர்தீன், B.A.,B.L.,L.L.M.,DJJJ.,Psy.,**

நீதித்துறை நடுவர் எண்.1, மன்னார்குடி.

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி (முழு கூடுதல் பொறுப்பு)

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் சித்திரைத்திங்கள் 08 ஆம் நாள்

**அசல் வழக்கு எண். 49/2022**

ரவிச்சந்திரன் ...வாதி

**// எதிர்//**

1. ராமலிங்கம்
2. வெண்ணிலா
3. வினோதினி ...பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 01.06.2022 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு ( 11.04.2023) என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் **திரு. P. பொன்னுலிங்கம், செல்வி. S. மேகலாதேவி, செல்வி. A.பெனசிர்பேகம்** ஆகியோர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினராக பாவிக்கப்பட்டு, வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இது நாள் வரை என் பரிசீலனையில் இருந்து வந்து (21.04.2023) இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**தீர்ப்புரை** :-

**தாவா சொத்தில் வாதிக்குள்ள அமைதியான அனுபோகத்தினை பிரதிவாதிகளோ, அவர்களது முகவரோ, அவர்களது ஆட்களோ எந்தகாலத்திலும், எந்தவிதத்திலும் அத்துமீறி நுழைந்து, ஆக்கிரமித்து தடைதகராறுகள் செய்ய**

**முயற்சிக்கக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியும் மற்றும் செலவுத்தொகைக் கோரியும் இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

2. **வாதியின் வாதுரையின் சுருக்கம்** :

பிரதிவாதிகள் தாவா சொத்தினை கிரயம் செய்து கேட்டு வாதி மறுத்துவிட்டதாக கூறப்பட்டுள்ளது.

கடந்த 08.05.2022ம் தேதியன்று வாதி தாவா சொத்தை மராமத்து வேலை செய்துக்கொண்டிருந்தபோது, தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து வாதியை மிரட்டியதால் இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** பிரதிவாதி வழக்கில் தோன்றாத்தரப்பினராக பாவிக்கப்பட்டுள்ளார்.

**4.** வாதி தரப்பில் **வாதி ரவிச்சந்திரன் வா.சா.1** ஆகவும், **இலரா வா.சா.2** ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். வா.சா.1-ன் மூலம் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ 3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5. வாதி வழக்குரையில் கோரியவாறு வாதிக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பதே இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சினை ஆகும்.**

வாதிதரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை, நிருபண அபிடவிட் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

வாதி தரப்பில் வா.சா.1 ஆக ரவிச்சந்திரன் விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி ரவிச்சந்திரன் தனது சாட்சியத்தில் 30.04.1993ம் தேதியிட்ட வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்ட ஆவணமான பதிவு செய்யப்பட்ட இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் மேற்படி ரவிச்சந்திரனுக்கு அவரின் தந்தை சிவமணி

எழுதிக்கொடுத்துள்ளதும் அதன் அடிப்படையில் அதில் உள்ள 1வது அயிட்ட சொத்தை பொறுத்து தாவா வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதும் தெரியவருகிறது.

வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்ட தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் தாவா சொத்தானது வாதியின் பெயரில் உள்ளதும் தெளிவாக தெரியும் ஆவணங்களாக வாதி தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.3 ஆகிய இ ரு ஆவணங்களும் தாவா சொத்தானது வாதி பெயரில் உள்ளதும் வாதியின் அனுபவத்தில் உள்ளது என்பதை வாதி தரப்பில் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது.

இவ்வழக்கின் அடிப்படை மூலமான வழக்கெழுமூலத்தை பொறுத்தவரை வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்ட பரவாக்கோட்டை காவல் நிலையத்தில் இடப்பிரச்சனை சம்மந்தமாக கொடுக்கப்பட்ட புகாரும் அதனை தொடர்ந்து இந்நீதிமன்றத்தில் வா.சா.2 ஆக சாட்சியமளித்த இலராவின் சாட்சியமும் மறுதளிக்கப்படாத சூழ்நிலையில் மேற்படி வழக்கெழுமூலம் நிரூபணம் செய்யப்பட்டதாகவே இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது.

வாதி தரப்பில் தாவா சொத்தானது வாதியுடையது என்பதையும் மேற்படி தாவா சொத்தில் பிரதிவாதிகளின் அத்துமீறல் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாலும் வாதி கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வுக்காண்கிறது.

**முடிவில், தாவா சொத்தில் வாதிக்குள்ள அமைதியான அனுபோகத்தினை பிரதிவாதிகளோ, அவர்களது முகவரோ, அவர்களது ஆட்களோ எந்தகாலத்திலும், எந்தவிதத்திலும் அத்துமீறி நுழைந்து, ஆக்கிரமித்து**

**தடைதகராறுகள் செய்ய முயற்சிக்கக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**ஒருபுறம் தோன்றாத்தரப்பினர் என்ற வழக்கு என்பதால் செலவுத்தொகை இல்லை.**

இந்த தீர்ப்புரை என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (21.04.2023) அவையறியப் பகரப்பட்டது.

A S AMEERDHEEN

Digitally signed by A S AMEERDHEEN
DN: cn=A S AMEERDHEEN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.(மு.கூ.பொ)

**விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள்** :-

**வாதி தரப்பில்** :-

1. ரவிச்சந்திரன்(வாதி)

2. இலரா

**பிரதிவாதி தரப்பில்** :- இல்லை

**குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்**:-

**வாதி தரப்பில்** :-

| | | | |
|---|---|---|---|
| 1. | வா.சா.ஆ.1 | 30.04.1993 | வாதிக்கு வாதியின் தகப்பனார் சிவமணி எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் -அசல் |
| 2. | வா.சா.ஆ.2 | 08.05.2022 | வாதி கொடுத்த புகார் மனுவினை ஏற்றுக்கொண்டதற்கான மனு ரசீது -அசல் |

| | | | |
|---|---|---|---|
| 3. | வா.சா.ஆ.3 | 09.05.2022 | வில்லங்க சான்றிதழ்-இணையதள நகல் |

**<u>பிரதிவாதி தரப்பில்</u>** :- இல்லை

A S AMEERDHEEN

Digitally signed by A S AMEERDHEEN
DN: cn=A S AMEERDHEEN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.(மு.கூ.பொ)